நாள்.18.07.2023

**அசல் வழக்கு எண். 164/2022**

<u>வா.சா.1</u> - 1,2 பிரதிவாதிகள் <u>தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி எனது மகள் ஆவார். நான் அவரின் அதிகார முகவர் ஆவேன். மகஜபீன் என்பவர் எனது மனைவி ஆவார். எனது மனைவியின் தந்தை பெயர் முகமது ஃபாருக். எனது மாமியார் பெயர் மெகபூப் அம்மாள். எனது மாமனாருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 4 வாரிசுகள். அவர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் முத்த மகள் பைரோஸ், பைசல் அகமது (மகன்), எனது மனைவியான மகஜபீன், சுகைலா ஆகியோர்கள். அவர்கள் அனைவரும் உயிருடன் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். எனது மனைவியான மகஜபீன் என்பவருக்கு ஆயிஷா அம்மா என்ற வேறு பெயர் உண்டா என்றால் இல்லை. நான் எப்போது மகஜபீனை திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் 1989 ல். எனது மனைவியான மகஜபீன் என்பவரை ஆயிஷா அம்மா என்ற பெயர் சிறுவயதிலிருந்தே உண்டு என்றும் அது எனக்கு நன்கு தெரியும் என்றும், நான் இந்த வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மனைவியை திருமணம் செய்வதற்கு முன்பாக எனது மாமனார் வீட்டில் உள்ள விபரங்கள் எல்லாம் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும் ஆனால் தற்போது ஞாபகமில்லை. முகமது ஃபாருக் மரைக்காயர் எந்த வருடம், எந்த இடத்தில் எப்போது இறந்தார் என்றால் மலேசியாவில் இறந்தார் தேதி மாதம் ஞாபகமில்லை. உடல் நிலை சரியில்லாமல் இறந்தார். எனது மாமியர் மெகபூப் என்பவர் மலேசியாவில் அவரது கணவருடன் வாழ்ந்து வந்தாரா என்றால் இல்லை. தாவா கிராமத்தில்தான் வசித்து வந்தார். எனது மாமனாருக்கு மலேசியாவில் ஒரு குடும்பம் உள்ளதா என்றால் உள்ளது. மலேசியவில் உள்ள எனது மாமனாரின் 2வது மனைவியின் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனது மாமியார் எந்த வருடம், எந்த இடத்தில் எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. எனது மாமியாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது மாமனார், மாமியாரின் பிள்ளைகளின் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது மாமியாரின் இறப்பு சான்று உள்ளதா

என்றால் உள்ளது. மாமனார், மாமியாரின் பிள்ளைகளின் வாரிசு சான்றிதழ்கள் இல்லை. நான் எனது மாமியாரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்தால் அவரின் பிள்ளைகளின் வாரிசு சான்றிதழ்கள் கேட்கப்படும் என்ற காரணத்தினாலும், அசல் வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் மேற்கண்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை ஆண்டுகளாக வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் எனது திருமணத்திற்கு முன்பு 4 ஆண்டுகளும், பிறகு 30 ஆண்டுகள் வளைகுடா நாடுகளில் வேலை செய்து வந்து கொரோனா தொற்றுநோய் காலங்களில் தாவா கிராமத்திற்கு வந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கின் எந்த விபரங்களும் தெரியாது என்றும், எனது மனைவி சொல்லிதான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவியார் நல்ல ஆரோக்கிய நிலையில்தான் உள்ளாரா என்றால் உடல் நிலை சரியில்லாத நிலையில் தான் எனக்கு அதிகார முகவர் பத்திரம் கொடுத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி நல்ல நிலையில் உள்ளார் என்றும், அவரை நீதிமன்றத்தில் அழைத்து சாட்சியம் அளித்தால் உண்மை வெளிப்படும் என்ற காரணத்தினால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை யார், எந்த ஆண்டு, யாரிடமிருந்து கிரையம் வாங்கியது என்றால் எனது மாமியார் 1970 ல் அப்துல் ரஹிம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். மேற்படி கிரையத்தை எனது மாமியார் அவரது கணவர் மலேசியாவிலிருந்து அனுப்பிய பணத்திலிருந்து வாங்கினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது மாமியார் அவரது கணவர் மலேசியாவிலிருந்து அனுப்பிய பணத்திலிருந்து தான் கிரையம் பெற்றார் என்றும் அதை நான் மறைத்து எனது மாமியார் சொந்தமாக வாங்கினார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு அவரது தாயார் 24.09.1981 ல் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய தானாசெட்டில் மெண்ட் ஆவணத்தின் அசலை பார்த்துள்ளேனா என்றால் பாத்துள்ளேன். கடைசியாக எப்போது பார்த்துள்ளேன் என்றால் 2005 மற்றும் அதற்கு முன்பும் பார்த்துள்ளேன். எனது மனைவியின் சகோதரர் பைசல் அகமது என்பவர் எனது வீட்டில் உள்ள பீரோவை உடைத்து 1970 ன் கிரை பத்திரம், 24.09.1981 ல் ஏற்பட்ட தானா செட்டில் மெண்ட் பத்திரத்தை எடுத்துசென்றுவிட்டார். அது சம்பந்தமாக சட்டப்படியான நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் தொடர் நடவடிக்கையாக அந்த ஆவணங்களை மீட்க

நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் வெளிநாட்டிற்கு சென்று விட்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை. 24.09.1981 ம் ஆண்டில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் ஹிப்பத் என்னும் தானா செட்டில்மெண்ட் பத்திரம் எந்த தேதியில் 2005 ம் ஆண்டில் எந்த மாதம் தேதியில் காணாமல் போய்விட்டது என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் யார், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தோன். வருடம் 2005 ,தேதி மாதம் தெரியாது. எனது மாமியாருக்கு 4 பிள்ளைகள் இருக்கும் நிலையில் எனது மனைவிக்கு மட்டும் தானாசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டிய அவசியம் என்ன என்றால் அதிராம்பட்டினம் முஸ்லிம் வழக்கப்படி திருமணம் செய்துக்கொடுக்கும் பெண்களுக்கு ஹிப்பத் மூலம் வீடு கொடுத்து, மாப்பிளையை வீட்டோடு வைத்துக்கொள்ளும் பழக்கம் உள்ளது அதனால் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்தார்கள். வாதியின் தாயாரி மகஜன் பீவிக்கு அவரது தாயார் மெபூப்அம்மாள் 24.09.1981 ல் எந்தவிதமான ஹிப்பத்தும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், தாவா சொத்தை அபகரிக்கும் வேண்டும் என்ற என்னத்தில் தயாரிக்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் வாதிக்கு மகஜன்பீவி 10.06.2005 ல் (வா.சா.ஆ.2) யை மோசடியாக ஏற்படுத்திய ஹிப்பத்தை கொண்டு இந்த ஆவணம் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் தானா செட்டில்மெண்ட் பத்திரம் அதை அனுசரித்து 13.12.2005 ல் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பத்திரங்கள் எந்தவிதமான மூல ஆவணங்கள் ஏதும் இல்லாமல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு மகஜன்பீவி 10.06.2005 ல் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தின் வில்லங்க சான்றிதழை எடுத்து பார்த்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி வில்லங்கத்தை பார்த்தபோதுதான் 1990 ல் தாவா சொத்தில் ஒரு வில்லங்கம் ஏற்படுத்தி ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்துள்ளதை தெரிந்துக்கொண்டேன். ஆனால் யார் பெயரில் இருந்தது என்றால் முகமது பருக் மரைக்காயரின் ஒரே ஆண் வாரிசான பைசல் அகமது என்பவரின் மனைவியான 2 ம் பிரதிவாதிக்கு தானா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக வில்லங்கத்தில கண்டுள்ளது. தாவா சொத்தினை 2 ம் பிரதிவாதிக்கு, அவரது கணவரும் மெகபூப் முகமது பருக் மரைக்காயரின் ஒரே ஆண்வாரிசான் பைசல் அகமது அதிராம்பட்டிணம் சார்பதிவாளர் ஆவண எண்.1056/1990 படி ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதியுள்ள விபரம்

வாதிக்கும், வாதியின் தாயாருக்கும் தெரியும் என்றால் நான் தான் வில்லங்கம் போட்டு பார்த்து தெரிந்துக்கொண்டேன். 10.06.2005 தேதி அன்று வாதிக்கு ஆதரவாக மகஜன்பீவி தானாசெட்டில்மெண்ட் பத்திரம் அதிராம்பட்டின்ம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும்போது அதற்கு முன்பாக 08.12.1990 ம் ஆண்டு ஆவண எண்.1056/1990 ன் படியான தானாசெட்டில்மெண்ட் பதிவாகியுள்ளது தெரிந்தும், அந்த உண்மையை மறைத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் செல்வாக்கை பயன்படுத்தை 10.06.2005 ம் தேதி அன்று பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு சட்டப்படியான உரிமை ஏதும் இல்லை என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதிக்கு , 2ம் பிரதிவாதி ஒரு விற்பனை ஆவணம் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தியுள்ள ஆவணத்தை செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தை செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூல ஆவணமான 10.12.1990 தேதியிட்ட அதிராம்பட்டின்ம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.1056/1990 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. பதிவு எண்.1056/1990 ல் ஏற்பட்ட ஆவணத்தை ரத்து செய்யவேண்டுமென பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் உரிமை கோரக்கூடிய 10.06.2005 மற்றும் 13.12.2005 தேதியிட்ட தானா செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலமாக வாதிக்கு எந்த உரிமை மூலமும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்டுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.